కடிதம்
# வென்றவர்
உண்மை முடிவு பாரபட்சமின்மை
தேசிய நாளிதழ்
தலைவர் மற்றும் தலைமை ஆசிரியர்: அனில் குமார்
தெலுங்கானா,ஆந்திரா,கர்நாடகா,தமிழ்நாடு

அக்ஷர விஜேத
CIRCULATED FROM TS, KA, AP & TN

| Saturday 06 September 2025 | தொகுதி – 06 | பிரச்சினை – 16 | விலை – 6.00/– | vijethatelugudaily@gmail.com | www.Vijethadaily.com |
|---|---|---|---|---|---|




# பாகிஸ்தானுக்கு கைவிரித்த சீனா..

இஸ்லாமாபாத்: சீனாவும், பாகிஸ்தானும் நட்பு நாடுகளாக உள்ளன. பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் வழங்குவது, உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவது, கடன் மற்றும் மானியமாக நிதியை சீனா வழங்கி வருகிறது. தற்போது இந்தியா, சீனாவுடன் நெருக்கம் காட்ட தொடங்கி உள்ளது. இந்நிலையில் தான் பாகிஸ்தானின் முக்கிய ரயில்வே திட்டத்துக்கு சீனா நிதி வழங்க மறுத்துள்ளது. இதனால் பாகிஸ்தான் ஆசிய மேம்பாட்டு வங்கியில் கடன் கேட்க தொடங்கி உள்ளது.பாகிஸ்தானும், சீனாவும் நெருங்கிய நட்பு நாடுகளாக உள்ளன. எல்லை பிரச்சனை காரணமாக பாகிஸ்தான் மற்றும் சீனாவுடன் நம் நாட்டுக்கு நல்ல உறவு இல்லை. மோதல் போக்கு இருக்கிறது. இதனால் பாகிஸ்தானும், சீனாவும் கைகோர்த்தன. சீனா, பாகிஸ்தானுடன் வர்த்தகத்தை அதிகரித்தது.ராணுவ தளவாடங்களை அதிகமாக பாகிஸ்தானுக்கு விற்பனை செய்தது. பாகிஸ்தானின் பாதுகாப்பு துறையில் பயன்படுத்தப்படும் ராணுவ தளவாடங்கள், போர் விமானங்கள் உள்ளிட்டவற்றில் சதவீதம் சீனாவின் தயாரிப்பாக உள்ளது. அதேபோல், பாகிஸ்தானில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவது, கடன் மற்றும் மானியமாக நிதி வழங்குவது உள்ளிட்டவற்றை சீனா மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது பாகிஸ்தானின் முக்கிய ரயில்வே திட்டத்துக்கு சீனா நிதி வழங்க மறுத்துள்ளது. அதோடு அந்த திட்டத்தில் இருந்து வெளியேறி உள்ளது. இந்தியா - பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் **(China - Pakistan Economic Corridor)** என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக பாகிஸ்தானில் கராச்சி -ரோஹ்ரி பிரிவு இடையேயான ரயில்வேயை மேம்படுத்த பாகிஸ்தான் முடிவு செய்தது. இதற்கான நிதியை சீனாவிடம் கேட்டது.

ஆனால் சீனா தற்போது மறுத்து விட்டது. இது பாகிஸ்தானுக்கு அதிர்ச்சியானது. இதையடுத்து பாகிஸ்தான் தற்போது அந்த திட்டத்தை செயல்படுத்த ஆசியன் மேம்பாட்டு வங்கியில் கடன் கோரி உள்து. இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்காக **2** பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு கடன் கோரி உள்ளது. இந்த சம்பவம் நடந்த காலம் என்பது மிகவும் கவனிக்கத்தக்கது.ஏனென்றால் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பாகிஸ்தானை அரவணைக்க தொடங்கி உள்ளது. அதேவேளையில் டிரம்பின் வரி விதிப்பால் இந்தியா - சீனா பகையை மறந்து ஒன்றாக கைகோர்த்துள்ளன. இப்படியான சூழலில் தான் சீனா, பாகிஸ்தானுக்கு உதவி செய்ய மறுத்துள்ளது. இது தற்போது பேசும் பொருளாகி உள்ளது.ஏனென்றால் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பாகிஸ்தானை அரவணைக்க தொடங்கி உள்ளது. அதேவேளையில் டிரம்பின் வரி விதிப்பால் இந்தியா - சீனா பகையை மறந்து ஒன்றாக கைகோர்த்துள்ளன. இப்படியான சூழலில் தான் சீனா, பாகிஸ்தானுக்கு உதவி செய்ய மறுத்துள்ளது. இது தற்போது பேசும் பொருளாகி உள்ளது.அமெரிக்காவுடன் பாகிஸ்தான் நெருக்கம் காட்டுவதாலும், இந்தியாவுடன் ஏற்பட்ட நெருக்கம் காரணமாக பாகிஸ்தானை, சீனா கைகழுவுகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. எதுவாக இருந்தாலும் சரி, சீனாவின் இந்த முடிவு என்பது பாகிஸ்தானுக்கு பெரிய அடியாக பார்க்கப்படுகிறது.

# முதுகில் குத்திய எடப்பாடி..



கடிதம் வென்றவர், | சென்னை:

மாநிலங்களவை எம்பி சீட்டு தருவதாக கூறி எடப்பாடி பழனிசாமி துரோகம் செய்துவிட்டதாகவும், கூட்டணி தர்மத்தை மீறி முதுகில் குத்திவிட்டதாக பிரேமலதா பேசினார் என செய்திகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் தான் ஒருபோதும் எடப்பாடி பழனிசாமி குறித்து பேசவில்லை என விளக்கம் அளித்துள்ள பிரேமலதா விஜயகாந்த், ஊடகங்கள் தவறான செய்தியை பரப்பியுள்ளதாக கூறியுள்ளார்.**2026** தேர்தலில் அதிமுக கூட்டணியை வலுப்படுத்த தேமுதிகவை கூட்டணிக்கு கொண்டு வர வேண்டும் என எடப்பாடி பழனிசாமி விரும்புகிறார். **2024** மக்களவைத் தேர்தலில் அதிமுக தேமுதிக கூட்டணி இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு நடந்த மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் எம்பி சீட்டை தங்களுக்கு வழங்க வேண்டும் என தேமுதிக வலியுறுத்தியது.

# டேபிளில் கிடந்த மொத்த ஜாதகம்..



கடிதம் வென்றவர், | சென்னை:

**2026** சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு கூட்டணியை வலுப்படுத்துவது தொடர்பாக தமிழக பாஜக தலைவர்களுடன் நேற்று பாஜக மூத்த தலைவர் அமித்ஷா தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். அப்போது தமிழ்நாட்டில் பாஜகவுக்குள் கோஷ்டி பூசல் அதிகரித்து வருவதைக் கண்டித்ததாகவும், போலியான பூத் கமிட்டி தொடர்பான அறிக்கையைக் காட்டி அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.**2026** சட்டமன்றத் தேர்தல் நடைபெற இருக்கும் நிலையில் தமிழக பாஜக அதனைத் தீவிரமாகக் கருத்தில் கொண்டு பணியாற்றி வருகிறது. கர்நாடகா வரை ஆளுங்கட்சியாகவும் எதிர்க்கட்சியாகவும் இருக்கும் பாஜக, தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் கால் பதிக்கத் தீவிரமாகி வருகிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் எதிர்க்கட்சி அந்தஸ்தையாவது பெற வேண்டும் என்பதுதான் பாஜகவின் திட்டம். தற்போதைக்கு அது முடியாத நிலையில் அதிமுக உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்து மூன்றாவது பெரும் கட்சியாக வரவேண்டும் என நினைக்கிறது.

## முதுகில் குத்திய எடப்பாடி..



ஆனால் எடப்பாடி பழனிசாமி அதற்கு சம்மதிக்கவில்லை. இதனால் அதிர்ச்சியில் இருக்கும் பிரேமல்தா விஜயகாந்த் கிட்டத்தட்ட அதிமுக கூட்டணியை விட்டு விலகிவிட்டதாகவே சொல்லப்படுகிறது. மேலும் திமுகவுடன் மறைமுக கூட்டணி பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்ததாக தகவல் வெளியானது.

அதிமுக கூட்டணி

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் தேமுதிக பூத் கமிட்டி ஏஜெண்ட கூட்டம் நடைபெற்ற நிலையில் அதில் பேசிய பிரேமலதா, எட்ப்பாடி பழனிசாமி துரோகம் செய்துவிட்டார், மாநிலங்களவை சீட்டு தருவதாக கடிதமும் கொடுத்தார். ஆனால் அரசியல் நாகரிகம் கருதி அந்தக் கடிதத்தை தாங்கள் வெளியிடவில்லை என பிரேமலதா பேசியதாக செய்திகள் வெளியாகின. இந்த பேச்சு அதிமுக மற்றும் பாஜகவினர் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பிரேமல்தா பேச்சு

ஜனவரி மாதம் நடைபெறும் தேமுதிக மாநாட்டில் தான் கூட்டணி குறித்து அறிவிப்பேன் என பிரேமலதா கூறி வந்த நிலையில் சில நாட்களாக திமுக தலைமையுடன் நெருக்கம் காட்டி வருகிறார். பல நேரங்களில் முதல்வர் ஸ்டாலினை பாராட்டியதோடு, நேரிலும் அவரை சந்தித்துப் பேசியது அதிமுகவினரை அதிர்ச்சி அடையச் செய்தது. மேலும் எடப்பாடி பழனிசாமி துரோகம் செய்துவிட்டதாகக் கூறியதால் அதிமுக கூட்டணிக்கு அவர் வரமாட்டார் எனவும் சில நிர்வாகிகள் கூறி வந்தனர்.

# ஆபரேஷன் தென் மாவட்டம்..

ஏற்கனவே திமுக மற்றும் அதிமுக உள்ளிட்ட கட்சிகள் தேர்தல் பணிகளை தொடங்கிவிட்ட நிலையில், திமுக தொடர்ந்து **2**வது முறையாக ஆட்சி அமைக்குமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இதற்காக தென் மாவட்டங்களில் திமுக கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.அந்த வகையில் இதுவரை திமுகவைக்குள்ட்டாத ஒரு தொகுதியில் முக்கியமான ஒன்று கோவில்பட்டி. **1962, 1989,2001**மற்றும்**2016** என்று **4** முறை திமுக நேரடியாக போட்டியிட்டபோதும், ஒருமுறைக் கூட வென்றதே இல்லை. **2016**தேர்தலில்கூட**428** வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது. இதனால் **2021**ஆம் ஆண்டு கோவில்பட்டி தொகுதியை சிபிஎம் வசம் கொடுத்தது.இல் காலையிலேயே ஊருக்குள் வந்த யானை.. கார், பைக் ஓட்டிகளை மிரள வைத்தசம்பவம் கடந்த தேர்தலில் சிபிஎம் கூட **3**வது இடத்திற்கு தள்ளப்பட்டது. அதிமுகவுக்குவெற்றி கிடைத்த நிலையில், **2**வது இடத்தை டிடிவி தினகரன் பிடித்தார். ஆனால் இம்முறை கோவில்பட்டியில் திமுகவை வெல்ல வைக்க வேண்டும் என்பதில் உடன்பிறப்புகள் தீவிரமாகபணிகளை மேற்கொண்டு வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி இருப்பதால், கனிமொழியும் தொடர்ச்சியாக கோவில்பட்டிக்கு வந்துசெல்கிறார்.



ஒவ்வொரு முறையும் தூத்துக்குடி வந்து செல்லும் போதும், கோவில்பட்டிக்கு தவறாமல் வருகிறார் கனிமொழி. இதனால் கோவில்பட்டியில் திமுக நிர்வாகிகள் உற்சாகத்தில் உள்ளனர்.
அதுமட்டுமல்லாமல் கோவில்பட்டி தொழில் சார் பகுதி என்பதால், கம்யூனிஸ்ட் கட்சிகளின் தாக்கல் அதிகமாகும். ஆனால் கடம்பூர் ராஜூவுக்கு எதிராக நேரடியாக திமுக வேட்பாளரை களமிறக்க திமுக திட்டமிட்டு வருகிறது. இல் காலையிலேயே ஊருக்குள் வந்த யானை.. கார், பைக் ஓட்டிகளை மிரள வைத்த சம்பவம் கடந்த தேர்தலில் சிபிஎம் கூட 3வது இடத்திற்கு தள்ளப்பட்டது. அதிமுகவுக்கு வெற்றி கிடைத்த நிலையில், 2வது இடத்தை டிடிவி தினகரன் பிடித்தார். ஆனால் இம்முறை கோவில்பட்டியில் திமுகவை வெல்ல வைக்க வேண்டும் என்பதில் உடன்பிறப்புகள் தீவிரமாக பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி இருப்பதால், கனிமொழியும் தொடர்ச்சியாக கோவில்பட்டிக்கு வந்து செல்கிறார்.ஒவ்வொரு முறையும் தூத்துக்குடி வந்து செல்லும் போதும், கோவில்பட்டிக்கு தவறாமல் வருகிறார் கனிமொழி. இதனால் கோவில்பட்டியில் திமுக நிர்வாகிகள் உற்சாகத்தில் உள்ளனர்.

## அபாய எல்லையை தாண்டுறீங்க..

# இஸ்ரேலுக்கு ஐக்கிய அரபு அமீரகம் எச்சரிக்கை!



துபாய்: (இஸ்ரேலை எச்சரித்த ஐக்கிய அரபு அமீரகம் UAE warns Israel) ஆக்கிரமிப்பில் உள்ள மேற்கு கரையை இணைக்கும் இஸ்ரேலின் திட்டம் ரெட்லைன் (அபாய எல்லை) தாண்டும் நடவடிக்கை என்றும், பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான உறவை இயல்பாக்கிய ஆபிரகாம் ஒப்பந்தத்தை சிறுமைப்படுத்தும் செயல் என்றும் இஸ்ரேலை ஐக்கிய அரபு அமீரகம் எச்சரித்துள்ளது.இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசா நகரை கட்டுப்பாட்டில் வைத்து இருந்த ஹமாஸ் அமைப்பினருக்கும் நீண்ட காலம் மோதல் நீடித்து வந்தது. இந்த மோதலின் உச்சமாக, கடந்த 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இஸ்ரேலுக்குள் புகுந்த ஹமாஸ் அமைப்பினர் கண் மூடித்தனமாக தாக்குதல் நடத்தியதோடு, இஸ்ரேலியர்கள் பலரையும் பிணைக்கைதிகளாக பிடித்து சென்றனர்.

இஸ்ரேல் ஹமாஸ் போர்

இதனால் கோபம் அடைந்த இஸ்ரேல் காசா நகர் மீது போர் தொடுத்தது. ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் அழிக்கும் வரை இந்த போர் தொடரும் என்றும் இஸ்ரேல் அறிவித்தது. இதையடுத்து, காசா மீது இஸ்ரேல் குண்டு மழை பொழிந்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே போர் நடைபெற்று வருகிறது. இந்த போரினால் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில், பல லட்சக்கணக்கான மக்கள் தங்கள் இடத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

ஐக்கிய அரபு அமீரகம் எச்சரிக்கை

ஹமாஸ் - இஸ்ரேல் இடையே போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சிகள் ஒருபக்கம் நடைபெற்றாலும், அதில் தற்போது வரை முடிவு எட்டப்படவில்லை. போரை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி இஸ்ரேலிலும் போராட்டம் நடைபெற்று வருகிறது. இதற்கிடையே, காசாவை முழுமையாக கைப்பற்றி இணைக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது இஸ்ரேல். நேற்று இரவு காசா முனையில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 31 பேர் கொல்லப்பட்டனர்.

## டேபிளில் கிடந்த மொத்த ஜாதகம்..



கடிதம் வென்றவர், | சென்னை:

2026 தேர்தல்

இதற்காக அதிரடியாக தமிழக பாஜக தலைவர்கள் மாற்றம் செய்யப்பட்டு இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. அந்த வகையில் இளம் ஐபிஎஸ் அதிகாரியான அண்ணாமலை தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு பாஜகவில் இணைந்தார். சேர்ந்த உடனே அவருக்கு துணைத் தலைவர் பதவி வழங்கப்பட்டதோடு தலைவர் பதவியும் அடுத்த சில மாதங்களில் வழங்கப்பட்டது. இந்த நிலையில் அண்ணாமலையின் பேச்சுகளால் அதிமுக கூட்டணியில் விரிசல் ஏற்பட்டது. பாஜக தலைவர்கள் மக்களவைத் தேர்தலை அதிமுகவும் பாஜகவும் தனித்தனி அணியாகத் தேர்தலை சந்தித்த நிலையில் இரு கட்சிகளுமே படுதோல்வியைச் சந்தித்தது. 2026 சட்டமன்றத் தேர்தலில் குறிப்பிட்ட வாக்கு சதவீதத்தையும் ஒரு சில எம்எல்ஏக்களையும் பெற வேண்டும் என்பதற்காக அதிமுகவுடன் மீண்டும் பாஜக கூட்டணி அமைத்துள்ளது. இதனால் தான் தேர்தலுக்கு ஒரு ஆண்டு இருக்கும்போதே அதிகாரப்பூர்வமாக கூட்டணியையும் அறிவித்தார் பாஜக மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான அமித்ஷா.

பாஜக கோஷ்டி

இந்த நிலையில் தமிழக பாஜக கட்சிக்குள் கோஷ்டி மோதல் இருப்பதாகவும் பல தலைவர்கள் தனி அணியாகச் செயல்படுவதாக டெல்லிக்குப் புகார்கள் பறந்தன. மேலும் அதிமுக தலைமையை அவமதிப்பது போல சில புகார்கள் டெல்லிக்குப் பறந்தன. இந்த நிலையில் தமிழக பாஜக தலைவர்களை வரவழைத்த அமித்ஷா நேற்று அவர்களுடன் ஆலோசனை நடத்தினார். அதே நேரத்தில் பாஜக முன்னாள் தலைவரான அண்ணாமலை அதில் கலந்துகொள்ளவில்லை.

# "ஒருங்கிணைந்த அதிமுக" செங்கோட்டையனின் ஒற்றை வார்த்தை..

## மீண்டும் முதல் புள்ளிக்கு தள்ளப்பட்ட எடப்பாடி



சென்னை: அதிமுக மூத்த தலைவர் செங்கோட்டையனின் திடீர் எதிர்ப்புக் குரல் காரணமாக, அக்கட்சியின் தொண்டர்கள் மத்தியில் மீண்டும் ஒருங்கிணைந்த அதிமுக கோஷம் உயிர்ப் பெற்றுள்ளது. கடந்த சில வாரங்களாக எடப்பாடி பழனிசாமியின் சுற்றுப்பயணம் பற்றிய பேச்சுகள் அதிகரித்திருந்த நிலையில், மீண்டும் அதிமுக ஒருங்கிணைப்பு கோஷம் எழுந்திருப்பது பின்னடைவாக பார்க்கப்படுகிறது.ஜெயலலிதா மறைவுக்கு பின் அதிமுக சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் அதிமுக தொடர் பின்னடைவை சந்தித்து வருகிறது. **2021** சட்டமன்றத் தேர்தலில் அதிமுக கணிசமான இடங்களில் வென்றிருந்தாலும், ஒற்றைத் தலைமை கோஷம் எழுந்தது. இதனால் எடப்பாடி பழனிசாமியை அக்கட்சி நிர்வாகிகள் பொதுச்செயலாளராக கொண்டு வந்தனர். அதன்பின்னரும் இடைத்தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுக தோல்வி அடைந்தது. நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு வரை அதிமுக ஒருங்கிணைய வேண்டும் என்று அக்கட்சி தொண்டர்கள் பேசி வந்தனர். ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுக வாக்கு சதவிகிதம் உயர்ந்ததால், கட்சி மீண்டும் எடப்பாடி பழனிசாமியின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. அதேபோல் அதிமுக முக்கியத் தலைவர்கள் விரும்பியதை போல் பாஜகவுடன் கூட்டணி அமைத்ததால், ஓபிஎஸ் தரப்பை சேர்க்கும் பேச்சே எழவில்லை.அதன்பின் பாஜக கூட்டணியில் இருப்பதாக கூறி வந்த ஓபிஎஸ் மற்றும் டிடிவி தினகரன் ஆகிய இருவரும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகுவதாக அறிவித்தனர். இதனால் அதிமுக பலவீனம் அடைந்ததாக பார்க்கப்பட்டது. ஆனால் எடப்பாடி பழனிசாமியின் சுற்றுப்பயணத்திற்கு மதுரை மற்றும் தென் மாவட்டங்களில் நல்லக் கூட்டம் கூடியது.எடப்பாடி பழனிசாமியின் சுற்றுப்பயணத்தை ஒருங்கிணைப்பதில் அதிமுக நிர்வாகிகள் தீவிரமாக மூழ்கியதால், யாரும் வாயே திறக்கவில்லை. இந்த நிலையில் எடப்பாடி பழனிசாமி மீது **6** மாதத்திற்கும் மேலாக அதிருப்தியில் இருந்த செங்கோட்டையன், அதிமுகவில் இருந்து பிரிந்தவர்களை ஒன்று சேர்க்க வேண்டும். எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோர் பிரிந்தவர்களையும் அரவணைத்து ஆட்சி நடத்தினார்கள்.தென் மாவட்டங்களில் அதிமுக என்ன நிலையில் இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். ஒருங்கிணைப்பு ஏற்படவில்லை என்றால், அதனை விரும்பும் அனைவரும் இணைந்து ஒன்றிணைப்போம். ஒருங்கிணைந்த அதிமுக வந்தால் மட்டுமே அதிமுக ஆட்சி அமையும் என்று தெரிவித்துள்ளார். இதற்கு அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டவர்கள் அனைவரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.இந்த பேட்டியில் செங்கோட்டையன் ஒருமுறை கூட எடப்பாடி பழனிசாமியின் பெயரை கூட சொல்லவில்லை. ஆனால் செங்கோட்டையனின் வார்த்தைகள் அதிமுக தொண்டர்கள் மத்தியில் மீண்டும் ஒருங்கிணைந்த அதிமுக என்ற கோஷத்திற்கு உயிர்க் கொடுத்துள்ளதாக பார்க்கப்படுகிறது. இந்த பேட்டிக்கு பின் கோபிசெட்டிப்பாளையத்தில் செங்கோட்டையனுக்கு மிகப்பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.அதேபோல் தேனி மாவட்டம் கம்பத்தில் எடப்பாடி பழனிசாமியின் பிரச்சார வாகனத்தையே பெண்கள் முற்றுகையிட்டு ஒன்றிணைந்த அதிமுக பேனருடன் கோஷம் எழுப்பினர். இதனால் எடப்பாடி பழனிசாமி மீண்டும் முதல் புள்ளியில் இருந்து தொடங்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளார். தென் மாவட்டங்களில் மட்டுமல்லாமல் கொங்கு மண்டலத்திலும் இந்த கோஷத்திற்கு ஆதரவு அதிகரித்துள்ளது.இதனால் வரும் நாட்களில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி என்ன பதில் கொடுக்கப் போகிறார் என்ற எதிர்பார்ப்பும் ஏற்பட்டுள்ளது. இத்தனை ஆண்டுகளாக ஓபிஎஸ், சசிகலா, டிடிவி தினகரன் ஆகியோரின் நீக்கத்திற்கு நியாயம் கற்பித்து வந்த எடப்பாடி பழனிசாமி, அடுத்ததாக செங்கோட்டையனையும் நீக்குவாரா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

# பாஜக தலைமை மீது அதிருப்தியா? டெல்லி மீட்டிங்குக்கு போகலையே! அண்ணாமலை கொடுத்த விளக்கம்



சென்னை: டெல்லியில் நேற்று தமிழ்நாடு பாஜக தலைவர்களுடன் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆலோசனை நடத்தியிருந்தார். இதில் அண்ணாமலை பங்கேற்கவில்லை. இந்நிலையில் பாஜக தலைமை மீது அண்ணாமலை அதிருப்தியில் இருப்பதாக தகவல்கள் வெளியாகின. தற்போது இது குறித்து அவர் விளக்கமளித்துள்ளார்.சொந்த காரணங்களுக்காகவே டெல்லி போகவில்லை என்று விளக்கமளித்திருக்கும் அண்ணாமலை, கூட்டணியில் சலசலப்பு இருக்கிறது என்றும், அது விரைவில் சரி செய்யப்படும் என நம்புவதாகவும் கூறியிருக்கிறார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அண்ணாமலை பேசியதாவது, "வேறு வேறு மனோபாவம் இருக்கக்கூடிய, சித்தாந்தம் இருக்கக்கூடிய குழுக்கள் என்டிஏ கூட்டணியில் இருக்கும்போது, பொதுவான நோக்கம் என்ன? திமுக தலைமையிலான ஆட்சியை 2026ல வீட்டுக்கு அனுப்பனும் அப்படிங்கறதுதான். பல குழுக்களால் பிரச்சினைகள் இருக்கிறது. இல்லை என நான் சொல்லவில்லை. ஆரம்பத்திலிருந்து இருக்கக்கூடிய பிரச்சனைகள்தான். அதெல்லாம் வருகின்ற காலத்தில் சரியாகும் என்கின்ற நம்பிக்கை இருக்கிறது.டிடிவி மற்றும் ஓபிஎஸ் பெருந்தன்மை மிக்க அரசியல்வாதிகள். அவர்கள் இருவருடைய அன்பையும் நான் பெற்றிருக்கின்றேன். ரொம்ப நெருக்கமா அவர்களிடம் நான் பேசக்கூடிய ஒரு மனிதன். நிச்சயமாக நல்ல ஒரு கூட்டணி அமைக்க அவங்க மறுப்பர்சீலனை செய்வார்கள் என்று நம்பிக்கை இருக்கிறது" என்று கூறியிருக்கிறார்.

அதேபோல செங்கோட்டையன் நாளை மனம் திறந்து பேசுவதாக கூறியிருக்கிறாரே, அது அதிமுகவில் பிளவை ஏற்படுத்தும் என்று நினைக்கிறீர்களா? என்று கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த அண்ணாமலை, "நான் யூகங்களுக்கு எப்படிங்க சொல்லுவேன்? யுகங்களுக்கு நான் பதில் அளிக்க முடியாது. ஏதாவது நடந்தால் நடந்துவிட்டது என்று கேளுங்கள் நான் பதில் சொல்றேன். டிடிவி முடிவை பற்றி கேட்டீர்கள் பதில் சொன்னேன்" என்று கூறியுள்ளார்.அதேபோல டெல்லி கூட்டம் குறித்து எழுப்பப்பட்ட கெள்விக்கு, "என்னை பார்த்தால் தலைமையுடன் அதிருப்தியில் இருப்பதை போலவா தெரிகிறது? வேலை பளு காணரமாக போகவில்லை. தொண்டர்கள் வந்து நேரம் கேட்கிறார்கள். தலைவராக இருந்த பொழுது நீங்க நேரம் கொடுக்கல, விசேஷத்துக்கு வரல இன்னைக்கு நீங்க வாங்க என தொண்டர்கள் அழைக்கிறார்கள். அவர்களுக்கு மதிப்பளிக்கணும். அதே நேரத்துல கட்சி தலைவர்களுக்கு நான் முறையாக தெரியப்படுத்தி இருந்தேன். அமித்ஷா ஜிக்கு போன் மூலம் தகவல் சொல்லியிருந்தேன்" என்று கூறியிருந்தார்.

நேற்று டெல்லியில் நடந்த கூட்டத்தில் உட்கட்சி பூசல், வார் ரூம் அரசியல், தொகுதி பொறுப்பாளர்கள் நியமனம், கட்சியின் வளர்ச்சிக்கு புதிய யோசனை, உள்ளிட்ட விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டிருந்தது. இந்த கூட்டத்தில் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய மந்திரி எல்.முருகன், பொன்.ராதாகிருஷ்ணன், தமிழிசை, எச்.ராஜா, வானதி சீனிவாசன், உள்ளிட்ட நிர்வாகிகள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# இந்தியா மீது வரி.. டிரம்ப் நினைத்தே பார்க்காத பின்னடைவு ..அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டில் அவசர முறையீடு

நியூயார்க்: கடந்த 1977-ம் ஆண்டின் சர்வதேச அவசர நிலை பொருளாதார அதிகார சட்டப்படி, அமெரிக்க அதிபர் டிரம்ப், இந்தியா, ரஷ்யா, சீனா, கனடா உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளுக்கு சரமாரியாக வரி விதித்தார். இந்நிலையில் இந்த வரிவிதிப்பை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதனை விசாரித்த நீதிமன்றம், அமெரிக்க வரிவிதிப்பு சட்டவிரோதம் என்ற தீர்ப்பளித்துள்ளது. இந்த உத்தரவை எதிர்த்து அமெரிக்காவின் உச்ச நீதிமன்றத்தில் டொனால்ட் டிரம்ப் அரசு மேல்முறையீடு செய்துள்ளது. விரைவில் விசாரிக்க வலியுறுத்தியுள்ளது.உக்ரைனில் போரை முடிவுக்கு கொண்டுவர விரும்பிய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ரஷ்யாவிடம் யாரும் கச்சா எண்ணெய் வாங்க வேண்டாம் என்று எச்சரித்தார். எனினும், இந்தியா, சீனா உள்பட பல்வேறு நாடுகள் ரஷ்யாவிடம் ஆயில் வாங்கி வருகின்றன. இந்த பணம் தான் உக்ரைனில் போரை முடிவுக்கு கொண்டுவர முடியாததற்கு காரணம் என்று கூறிய டிரம்ப், வரி விதிக்கப் போவதாக அறிவித்தார். அதன்படியே வரிகளை விதித்தார். இந்தியாவிற்கு 50 சதவீதம் என்கிற அளவிற்கு வரி விதித்துள்ளார். இதேபோல் சீனா, ரஷ்யா உள்பட பல்வேறு நாடுகளுக்கு வரி விதித்துள்ளார்.

அதிகாரம் என்ன

உலகின் பல்வேறு நாடுகளுக்கு வரிவிதிக்க அமெரிக்க அதிபருக்கு டிரம்ப்புக்கு சட்ட விதிகள் அந்த நாட்டில் அனுமதிக்கின்றன. கடந்த 1977-ம் ஆண்டின் சர்வதேச அவசர நிலை பொருளாதார அதிகார சட்டம் மூலம் பிற நாடுகள் மீது வரி விதிக்க நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் உள்ளது. முன்னதாக அந்த அதிகாரம் எம்.பி.க்கள் கையில் தான் இருந்தது. அதனை படிப்படியாக அதிபருக்கு கொடுத்து விட்டனர். அந்த அதிகாரத்தை பயன்படுத்தி தான், இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் மீது டிரம்ப் வரி விதித்து வருகிறார்.

சட்டவிரோதம்

அதற்கு எதிராக அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அதை விசாரித்த கோர்ட்டு, டிரம்ப் வரி விதித்தது சட்டவிரோதம் என்று அறிவித்தது. அவசரநிலை சட்டத்தை சட்டவிரோதமாக பயன்படுத்தி வரி விதித்ததாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அந்த உத்தரவை எதிர்த்து அமெரிக்காவின் உச்ச நீதிமன்றத்தில் டிரம்ப் அரசு மேல்முறையீடு செய்துள்ளது. நேற்று முன்தினம் இரவு, ஆன்லைன் மூலம் 251 பக்க மனு தாக்கல் செய்தது.

டிரம்ப் அரசு மேல்முறையீடு

அதில், அமெரிக்க அரசின் சொலிசிட்டர் ஜெனரல் டி.ஜான் சாயர் கூறுகையில், "அமெரிக்க அரசின் வரி விதிப்பு சட்டவிரோதம் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. நீதிமன்றத்தின் இந்த முடிவால் கடந்த 5 மாதங்களாக அதிபர் டிரம்ப், வெளிநாடுகளுடன் மேற்கொண்டு வரும் வர்த்தக பேச்சுவார்த்தையில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே பேச்சுவார்த்தை முடிவடைந்த ஒப்பந்தங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

அச்சிடப்பட்டது, வெளியிடப்பட்டது மற்றும் சொந்தமானது DR.B.ANILKUMAR ,@ 407 தர்ணாகா , ஹைதராபாத் , தெலுங்கானா மாநிலம். DAIWIK PUBLICATIONS pvt.ltd இல் வெளியிடப்பட்டது. SNEHITHA PRINTERS H.NO: 2-6 , வாரங்கல் மாவட்டம்.தெலுங்கானா மாநிலம் , ஆசிரியர் DR.B.ANILKUMAR ,RNI NO TELTEL/2021/ 81079 , செல்: 7702866885 ,vijethatelugudaily@gmail.com